2

OFFICE OF THE ... 8-JUN 1934 ... MAD

1292

வருட சந்தா ரூ. 1—8—0 தனி ப்ரதி 0—2—0

SRI

# JYOTISHA BODHINI

**A High Class Astrological Monthly in Tamil and English**

# ஜ்யோதிஷ போதினீ

ஓர் உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—பலாசூர் பண்டித நா. ராமநாத சாஸ்திரி

Vol. I — MAY 1934 — No. 2

விஷயக்ரமம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசார்ய புஜங்கம் | 25 |
| 2. | ஜ்யோதிஷ சாஸ்திரம் | 27 |
| 3. | ஜ்யோதிஷிக லக்ஷணம் | 29 |
| 4. | நக்ஷத்ர ஜாதகம் (பலன்கள்) | 34 |
| 5. | ஜாதகமஞ்ஜரீ 1-ம் ஜாதகம் | 36 |
| 6. | ஜ்யோதிஷ பாடம் | 41 |
| 7. | Sex and character study from the seventh Bhava. | 44 |
| 8. | Periodicals | 48 |


1090

R... 01760

**Jyotisha Bodhini Office**

Mylapore, Madras.

# ஜ்யோதிஷபோதினி

## நிபந்தனைகள்

1. இப்பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதத்திலும் வெளியாகும். சந்தாத் தொகையை எல்லோரும் முன் பணமாகவே அனுப்ப வேண்டும். இல்லாவிடில் வி. பி. யில் பெற்றுக் கொள்ளலாம். அப்படியானால் 6-அணு அதிகமாகும்.

2. நமது பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் ஸ்டாம்பாவது அனுப்பவேண்டும்.

3. சந்தாதாரர்கள் எப்போது சேர்ந்தாலும் அவ்வருஷத்திய ஏப்ரல் மாதச் சஞ்சிகையிலிருந்தே அனுப்பப்படும்.

4. ஜ்யோதிஷத்திலும் கணிதத்திலும் அரிய விஷயங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி யனுப்பினால் பிரசுரிக்கப்படும்.

5. எட்டு சந்தாதாரர்களைச் சேர்த்துப் பணம் வசூலித்து அனுப்புபவர்களுக்கு ஒரு வருஷம் வரையில் காப்பிகள் இனமா யனுப்பப்படும்.

எல்லா ஊர்களிலும் சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்ப நல்ல ஏஜெண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

---


நேர்த்தியான அச்சு வேலைகள் ! குறைந்த சார்ஜு !!

குறித்த காலத்தில் வேலை முடித்துத் தரப்படும் !!!

நண்பர்காள் !

எமது அச்சுக்கூடத்தில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், கிரந்தம், தேவநாகரம் ஆகிய இவ்வேழு பாஷைகளிலும் பெரிய புத்தகம் முதல் சிறிய விளம்பர பத்திரிகை வரையிலுள்ள எல்லா விதமான அச்சு வேலைகளும், வெகு நேர்த்தியாயும், சுத்தமாயும், குறிப்பிட்ட காலத்திற்குச் செய்து தரப்படும். ஒரு தரம் வேலை கொடுத்துப் பார்த்தால் உங்களுக்கே தெரியும். எமதிடத்தில் சார்ஜுகள் மிக்க சொல்பம். நண்பர்களெல்லோரும் எமது அச்சுக்கூடத்தில் வேலைகள் செய்வித்துக்கொண்டு பலன் பெறக்கடவார்களென விரும்புகின்றனம்.

**மானேஜர்—கீதாசார்யா பிரஸ்,**

நெ. 8, ஆரணி கங்கன் தெருவு,

பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.

OFFICE OF THE
8-JUN 1934

உ

ஸ்ரீ:

சுபமஸ்து

ஆதித்யாதி நவக்ரஹ தேவதாப்யோ நம:

# ॥ ज्योतिषबोधिनी ॥

# ஜ்யோதிஷபோதினீ

ஓர் உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

மலர் 1 } மே, 1934 { இதழ் 2

॥ श्रीः ॥

श्रीगुरुभ्यो नमः ॥

## आचार्यभुजङ्गम् ।

श्रीमान् सर्वेश्वरः साक्षाद् ज्ञानदाता शिवः स्वयम् ।
शङ्कराचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥ १ ॥

मुदा नस्तनोत्वेष सर्वेश्वरः शं सदा सर्वलोकस्य रक्षाधुरीणः ।
यदीये पदाब्जे मनः स्थापयित्वा परं सौख्यजातं जनः प्राप्नुयात्सः ॥ २ ॥

भजे विघ्नराजं भजे पार्वतीशं भजे शंकराचार्यवर्यं दयालुम् ।
भजे कामकोट्याख्यपीठाधिराजं भजे चन्द्रभूषाभिधानं गुरुं तम् ॥ ३ ॥

सदाचार्यवर्यस्य पादारविन्दे प्रणामाननेकान्विरच्याग्रतोऽहम् ।
मुदा भक्तियुक्तेन चित्तेन वित्तः स्तुवंस्तं यतीन्द्रं च धन्यो भवेयम् ॥ ४ ॥
कलावत्र धर्मे सुदूरं द्रुते द्राक् तथा पापजाले प्रधाने च भूते ।
जनस्यास्य रक्षां सुपूर्णां विधातुं गुरोरस्य मूर्त्या चरत्येव शम्भुः ॥ ५ ॥
नमाम्यन्वहं कामकोट्याख्यपीठं गुरुं तत्र कान्त्या महत्या लसन्तम् ।
सदा चन्द्रभूषाभिरामाभिधानं कृपापूर्णचित्तं नतानां शरण्यम् ॥ ६ ॥
कलेर्दोषजालं समूलं निरस्यन् जनं पापसङ्गाद्भृशं वारयंश्च ।
अवन्साधुबृन्दं दिशन् ज्ञानमाद्यं गुरुश्चन्द्रभूषो विजेजीयतेऽयम् ॥ ७ ॥
मुखे मञ्जुहासो गळे तारहारः करे ज्ञानमुद्रा हृदि प्रेमसारः ।
पदे नन्तृलोकावनत्वं च यस्य गुरुं चन्द्रचूडाभिधानं भजे तम् ॥ ८ ॥
प्रभो लोकमज्ञानमग्नं चिराद्द्राक् समुद्धर्तुमारात्कृपातोऽवतीर्ण ।
प्रसीद प्रसीदेति नित्यं वदन्तो जनाः पावयन्तीह हृष्टान्तरङ्गाः ॥ ९ ॥
स्वधाम्ना जिताखण्डलादित्यकान्ति स्वभूम्ना जितब्रह्मविष्ण्वादिदेवम् ।
स्ववाचा जिताशेषगङ्गाप्रवाहं स्वयं ब्रह्मरूपं महाऽऽचार्यमीडे ॥ १० ॥
यतीन्द्रादिशिष्यैरनेकैर्वृतो यो नतानां सलीलं सुधापूर्णवाग्भिः ।
सदाचारभक्त्यादिसुज्ञानदाता गुरुः सन्निविष्टो हृदि द्योततां मे ॥ ११ ॥
भुजङ्गप्रयाताख्यवृत्तैर्मनोज्ञैः कृतं स्तोत्ररत्नं गुरोः पादमूले ।
जगद्वन्द्यकीर्तेश्च कारुण्यमूर्तेः समर्प्यात्र भक्त्या कृतार्थो भवेयम् ॥ १२ ॥

अडयार् ग्रन्थशालायां पण्डितो भक्तिसंयुतः ।
पलाशूर् रामनाथोऽयमाचार्यभुजगाभिधम् ॥
स्तोत्रं भव्यं व्यासपूजाकाल आङ्गिरसे व्यधात् ॥

**Palasur Pandit N. Ramanatha Sastri,**
*Senior Samskrit Pandit, Adyar Library, Madras.*

# ஜ்யோதிஷ சாஸ்திரம்

வேத நேத்திரமாகிய இந்த சாஸ்திரமானது தேவத் தன்மை பொருந்தியதாயும் இந்திரியங்களுக் கெட்டாத ஞான மாயும் விளங்குகிறது. இதுவே பிரத்யக்ஷமான சாஸ்திரமாகும். ஏனெனில் சந்திர சூரியர்கள் இதற்குச் சாக்ஷியானவர்கள். சூரியனே நவக்ரஹங்களுக்கெல்லாம் அதிபதி. அவருடைய உதயாஸ்தமனங்கள் எவ்வளவு கணக்காய் இருக்கின்றன. அவை களாலே உலகங்களுக்குக் கால நிர்ணயம் ஏற்படுகின்றது. அதாவது விநாடி, நாழிகை, நாள், வாரம், பக்ஷம், மாதம், வருஷம் இவை ஏற்படுகின்றன. இவைகளால் ஒவ்வொன்றுக்கும் ஆயுள் பிரமாணம் ஏற்படுகிறது. அப்படியே ஜல மயமான சந்திரனுடைய பிம்பத்தி லும் சூரியனுடைய கிரணங்கள் வியாபித்து இரவிலுள்ள இருட்டைப் போக்குகின்றன. ஆதலால் சந்திரனுக்கு ஸ்வயம் பிரகாசம் இல்லை யென்று கூறுகிறார்கள். நமக்கு ப்ரத்யக்ஷமாய் உதயமாகி தங்களது கதி வசத்தால் உலகிற்குக் கால நிர்ணயம் செய்வதால் அவர்களைப் பிரதானமாய் உடைய இந்த சாஸ்திரமும் பிரத்யக்ஷமானதே. இதில் கூறும் த்ரிகால பலன்களும் பிரத் யக்ஷமானவைகளே. நன்கு பலிக்கக் கூடியவைகளே. ஆனால் உலகில் அவ்வித மில்லாமல் இதற்கே ஓர் கௌரவக் குறைவு ஏற்பட்டிருப்பதானது இந்த சாஸ்திரத்தால் வந்ததல்ல. ஆனால் இதைக் கையாளும் மனிதர்களாலேயே நேர்ந்தது. அதற்கேற்ப இந்த சாஸ்திரமும் வெகு ஸாமான்ய விதிகளையும் விசேஷ விதிகளையும் அடக்கி யுள்ளது. அதனால் இதைப் பார்க்கும் மனிதர்கள் நன்கு ஆராய்ந்து பாராமல் மேலோடு கவனித்து எதையோ கூறுகின்றனர். அது எப்படியோ ஆகின்றது. அதனால் சாஸ்திரத்திற்கே மிகுந்த கெட்ட பெயர் ஏற்படுகின்றது. ஆகவே நமது புத்திக் குறைவே தவிர சாஸ்திரம் எப்போதும் கெட்டதல்ல. பலிக்காததல்ல. மிகவும் சிரேஷ்டமானதே. நன்கு பலிக்கக்கூடியதே. பிரத்யக்ஷமானதே. ஆதலால் இதன் உண்மையை

சகலரும் நன்கு அறியவேண்டும். அறிந்து அதன்படி நடந்தால் சகலருக்கும் அளவற்ற நன்மை ஏற்படும். இவ்வுண்மையை யறிந்தும் சிலர் "இதை நாம் நம்புவானேன். நம்பினுலும் நம்பா விட்டாலும் நடக்கிறது நடந்தே தீருமே. ஆதலால் இதை நம்புவது முட்டாள்தனந்தான்" என்று மற்றவரைப் பரிஹஸிக்கிருர்கள். ஆனுல் இவர்கள் கூறுவது முட்டாள்தனமே. ஏனென்ருல் வருவது வந்தே தீரும். ஆனுல் இந்தக் காலத்தில் இது வருகிற தென்று முன்பே தெரிந்துகொண்டு அதற்குத் தக்க சாந்தி முதலிய பரிகாரங்களைச் செய்து வந்தால் வெகு கடுமையாய் வருவது சற்று லகுவாய் வரலாம். எவ்விதமெனில் ஒருவன் நம்மிடம் வெகு குரூரனுய் இருந்தால் அவனுக்குத் தகுந்த உபசாரம் நல்வார்த்தை களால் அவன் சாந்தனுகி நம்மிடமுள்ள விரோதத்தை அடியோடு விட்டுவிட்டு அருமை ஸ்நேகிதன் ஆவதை உலகில் பார்த்திருக் கிருேமல்லவா. ஒரு மனிதனே இவ்வாறு ஆகும்போது தேவதை களான கிரகங்கள் பூஜை ஜபம் முதலிய சாந்திகளால் நல்லவர் களாகி நமக்கு நேரிடும் பெரும் ஆபத்துகளை யெல்லாம் சாந்தப் படுத்தி லகுவாய்ப் போகும்படி செய்வது முடியாத காரியமா? ஆதலால் இவைகளில் பரிபூர்ண நம்பிக்கையோடு நாம் ஆசரித்து வந்தால் நமக்கு நன்மையே ஏற்படும். தீமை வருவதானுலும் நம்பிக்கையோடு நாம் நடத்தும் உபசரணைகளால் வெகு லகுவாகவே யிருக்கும். இவ்வாறு பிரத்யக்ஷமாயும் முதலில் மனிதனுக் கும் பிறகு உலகிற்கும் நன்மை புரியும் இந்த சாஸ்திரத்தை மிகுந்த பக்தி சிரத்தையோடு வேதம்போலவே அத்யயனம் செய்ய வேண்டும். பொதுவாய் சாஸ்திரங்களை அத்யயனம் செய்யும்போது 'அனுபந்த சதுஷ்டயம்' என்பதை நன்ருய் தெரிந்துகொள்ள வேண்டும். அனுபந்தமாவது சம்பந்தம். அது விஷயம், பிரயோஜனம், ஸம்பந்தம், அதிகாரி என்று நான்குவிதம். இந்த 'அனுபந்த சதுஷ்டயத்தைத்' தெரிந்துகொண்டே சாஸ்திரங்களை அப்யசிக்கவேண்டும். அவ்வாறே இந்த சாஸ்திரத் திற்கும் விஷயமாவது உலகிற்குச் சுபாசுபங்களை நிரூபித்தல். பிரயோஜனமாவது யாகம், அத்யயனம், ஸங்கிரமணம், கிரகசாந்தி,

16 கர்மங்கள் இவைகளுக்குத் தகுந்த காலங்களை நிர்ணயித்தல். ஸம்பந்தமாவது வேதாங்கமா யிருத்தல். அதிகாரி இவ்விஷயங்களை யறிந்துகொள்ள ஆவல் உள்ளவன். இவ்விதம் முதலில் அனுபந்த சதுஷ்டயத்தை யறிந்து பிறகு பக்தி சிரத்தையுடன் இந்த சாஸ்திரத்தை அப்பயஸித்தால் இது இங்கு நல்ல பலன்களைக் கொடுப்பதோடு லோகாந்தரத்திலும் நல்ல ச்ரேயஸ்ஸை யளிக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமே யில்லை. மேலும் பிரும்மாவே இதை உலக நன்மைக்காக உலகில் ஏற்படுத்தி யிருக்கிறபடியால் எல்லோரும் வெகு பிரயத்னத்தோடு இதை அத்யயனம் செய்ய வேண்டும். அதனால் வரும் பலன்களையும் நன்றாய் அறிந்து ஸகல நன்மைகளையும் அடையலாம்.

---

## ஜ்யோதிஷிக லக்ஷணம்

ஜ்யோதிஷிகன் என்பது ஜோஸ்யன் எனவும் சோதிடன் எனவும் மாறி வந்தது. ஜ்யோதிஷிகன் என்றால் ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்ப் பயின்று அதன்படி பலன்களை எடுத்துரைப்பவன் என்று அர்த்தம். அவனுக்கே 'தைவஜ்ஞன்' என்றும் 'ஸாம்வத்ஸரிகன்' என்றும் பெயர். அதாவது ஒவ்வொருவருடைய ஜாதகத்தைக் கொண்டு அவரவர்களுடைய 'தைவத்தை' யறிந்து கூறுபவன். தைவமாவது பாக்யமென்றும் விதியென்றும் அர்த்தமாகும். அந்த விதிப்படி எதெது நடக்கின்றதோ அல்லது நடக்கப் போகின்றதோ அதை யறிந்து கூறுகிறவன் 'தைவஜ்ஞன்' என்னப்படுவான். அப்படியே ஸாம்வத்ஸரிகன் என்பது ஸம்வத்ஸர (வருஷ) பலன்களை யறிந்து ஜனங்களுக்குக் கூறுகிறவன். ஆகவே ஜனங்களுக்குத் தெரியாமலிருக்கும் விஷயங்களை நன்கு அறிந்து சொல்பவனே சோதிடன் என்னப்படுவான். அவன் ஜ்யோதிஷ சாஸ்திரத்தின் மூன்று ஸ்கந்தங்களையும் அறிந்தவனாயும், ச்ரௌதம் ஸ்மார்த்தம் என்னும் கிரியைகளை நன்கு அனுஷ்டிப்பவனாயும், டம்பம் இல்லாதவனாயும், ஸத்யத்தையே பேசுபவனாயும், தைவத்தை நன்றாய் அறிந்தவனாயும் இருக்கவேண்டும். மேலும் தெளிவாய் கணக்குப் போடுகிறவனாயும்,

பலன் நேரும் காலத்தை அறிகிறவனையும், நல்ல நடத்தை யுள்ள வனையும், முன்பின் விஷயங்களை ஞாபகம் வைத்துக்கொள்கிறவனை யும் இருக்கவேண்டும். ஏனெனில் இந்த சாஸ்திரமானது உத்ஸர்க் கங்களாலும் அபவாதங்களாலும் மிகவும் பரிபூர்ணமானது. அதாவது முதலில் ஒரு விதியை சாமான்யமாய்க் கூறுவது உத்ஸர்க்கம். பிறகு அதற்கு எதிரிடையாய் மற்றொன்றைக் கூறுவதினால் பின் சொன்ன விதி முன் கூறியதற்கு அபவாதமாகும். இதை யறியா மலே பலன் கூறினால் அவ்வளவும் வீணாகிவிடும். ஆதலால் சோதி டன் முன் பின் விஷயங்களை நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். கணித சாஸ்திரத்தில் நல்ல பழக்க முள்ளவனா யிருக்க வேண்டும். பின்னம், அபின்னம், ஸவர்ணம் முதலிய கணக்குகளி லும் அதிக பயிற்சி யுள்ளவனாயு மிருக்கவேண்டும். அதோடு பசி தாகங்களைப் பொறுப்பவனாயு மிருக்கவேண்டும். ஏனெனில் ஒரு ஜாதகம் பார்க்கும்போதாவது அல்லது கணக்குப் போடும் போதாவது பசிதாகத்தோடிருந்தால் இவனுக்கு புத்தி அதில் நேராய்ச் செல்லாது, ஏதாவது ஒன்றைத் தாறுமாறாய்ச் சொல்ல நேரிடும். ஆதலால் இவன் பசிதாகம் முதலியவைகளைப் பொறுக்க வேண்டும். இப்படிப்பட்டவன் தான் கற்றவர் ஸபையில் நல்ல புகழ் பெறுவான். இன்னும் அவன் ஸித்தாந்த சாஸ்திர விசாரங் களையும் ஜாதக பலன்களைக் கூறும் கிரந்தங்களை யெல்லாம் படித்து சுத்தமான அர்த்தத்தை யறிந்தவனையும், பிரச்ன சாஸ்திரத்தைக் கற்றவனையும், சிக்கிரம் கிரஹிக்கும் புத்தி யுள்ளவனையும், நல்ல குணமுள்ளவனையும், ஸ்திரமான மனமுள்ளவனையும், சுத்தமான சித்த முள்ளவனையும், பீஜ சாஸ்திரங்களில் கெட்டிக்காரனையும், அப்படியே தர்மிஷ்டனையும், கலைகளை யறிந்தவனையும், கணக்கில் நிபுணனையும் இருக்கவேண்டும். இந்தக் கணிதமானது எங் கும் ஒரே மாதிரியாகவே யிருக்கும். ஆதலால் அதற்கு 'ஸித் தாந்தம்' என்று பெயர் எனக் கூறினோமல்லவா. ஆனால் இப் போது வழக்கத்தில் பார்க்கும்போது அது மாறாகவே காணப் படுகின்றது. ஏனெனில் ஒரே ஊரில் ஒரேவித சாதனங்களைக் கொண்டு கணிக்கப்படும் பஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்று

வித்தியாசமாகவே காணப்படுகின்றன. இதற்கு காரணம் யாதோ? இந்தப் பஞ்சாங்கங்களைக் கொண்டு கூறும் பலன்களும் எவ்விதம் சரியா யிருக்கும்? ஆதலால் சோதிடன் இந்த கணிதங்களில் மிகவும் சமர்த்தனு யிருந்தால் தானே ஆராய்ந்து பார்த்துக் குண தோஷங்களை யறிந்து சுத்தமான பலன் கூறலாம். ஆதலால் ஊரில் ஜ்யோதிஷிகன் இல்லாவிட்டால் தீபமில்லாத இரவுபோலவும், சூரியன் இல்லாத ஆகாயம்போலவும், வழி தடுமாறும் குருடன் போலவும், கஷ்டப்பட நேரிடும். ஆகவே தனது நன்மையைக் கோருகிற ஒருவன் ஜோசியன் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது. ஏனெனில் இவன் நேத்திரம்போலிருப்பதால் எல்லாருடைய கஷ்டங்களையும் போக்கி நன்மையை உண்டாக்குவான். இவ்விதம் ஸமஸ்தமான அங்கம் உப அங்கம் இவைகளில் கரை கண்டவனுயும் இருக்கும் தைவஜ்ஞனை அவச்யம் பூஜிக்கவேண்டும். இல்லாவிட்டால் கெடுதி நேரிடும். அவ்வாறே அகங்காரம் மமகாரம் இவைகளை யொழித்து ஒருவிதமான பற்றுதலும் இல்லாமல் காட்டில் காய், கிழங்கு, வாயு, ஜலம் இவைகளை ஆகாரம் செய்து வரும் மகான்கள்கூட ஜ்யோதிஷம் அறிந்தவனை யணுகி விஷயங்களைக் கேட்கிறுர்கள். அவ்விதமிருக்க நாட்டிலிருந்து ஸம்ஸார வாழ்க்கையை நடத்திவரும் நமக்கு அவர்களைப் பூஜிக்கவேண்டியது அவச்யம்தான் என்று சொல்லவும் வேண்டுமோ. தவிர மிலேச்சர்களே யவனர்கள். அவர்களே கிரீக்கியர்களென்றும் கூறப்படுகின்றனர். அவர்களிடம் இந்த சாஸ்திரம் நன்றுய்ப் பரவி பலிதமாய் இருந்ததினுல் அவர்களும் ரிஷிகள்போலவே பூஜிக்கப்படுகின்றனர். அவ்வாறிருக்க இந்த சாஸ்திரத்தை நன்றுய்க் கற்றறிந்த பிராம்மணனைப் பற்றி கேழ்ப்பானேன். அவனை வெகு பக்தி சிரத்தையுடன் பூஜிக்க வேண்டுமென்பதே பரம தாத்பரியம். இக்காலத்தில் ஜ்யோதிஷ பலன்களை யறிய விரும்புவோரும் சரியாய்க் கேழ்ப்பதில்லை. அதில் பக்தி சிரத்தையுடனே கேட்டு அறியவேண்டும். இவ்விதம் நமக்கு அதில் பரிபூர்ண பக்தியிருந்தால்தான் அதுவும் பலிக்கும். 'மந்திரத்திலும் தீர்த்தத்திலும் பிராம்மணனிடத்திலும் தைவத்தியனிடத்திலும் தைவஜ்ஞ

(சோதிட) னிடத்திலும் மருந்தினிடத்திலும் குருவினிடத்திலும் எவ்வளவு விச்வாசம் இருக்கிறதோ அவ்வளவு சித்திதான் ஏற்படும், என்று பெரியோர்கள் கூறி யிருக்கிறார்கள். ஆதலால் பக்தி சிரத்தையோடு அவரை யணுகி பலன்களைக் கேழ்க்கவேண்டும். இப்படிக் கேட்டால் அவர் சொல்லும் பலன்களும் நன்றாய்ப் பலிக்கும். அதல்லாமல் வெகு அவசரமாய் ஜாதகத்தைக் கொடுத்து உடனே பலன் அறிய விரும்புகிறவர் பலர். சோதிடர் அதை நிதானமாய்ப்பார்க்கவும் அவருக்கு அவகாசம் கொடுப்பதில்லை. தவிர விவாகப் பொருத்தம் பார்ப்பவரின் அவசரமோ சொல்லி முடியாது. ஒரு கட்டு ஜாதகத்தைக் கொடுத்து அப்போதே பொருத்தம் அறிய விரும்புகின்றனர். அதில் வெகு ஜாதகங்கள் கடிதம் கிழிந்துபோய் பென்சலில் குறிக்கப்பட்டு நன்றாய்ப் புலப்படுவதில்லை. இது ஜீவித காலம்வரை முக்யமான ரிகார்டு என்று மதிப்பதில்லை போலும். இதுவே பத்திரம் முதலிய ரிகார்டுகள் எவ்விதம் வைக்கப்படுகின்றன? ஜாதகத்திற்கு மாத்திரம் இந்த கதி என்ன? ஆதி நாட்களில் மகம்மதிய ராஜாங்கங்களில் ஜாதகங்களைத் தங்க தகட்டில் அந்தந்த க்ரஹங்களுக்கேற்ற ரத்னங்களால் இழைத்து வெகு அழகாய் வைத்திருந்தார்கள் என்று சொல்லப் படுகின்றது. பிறகு நமது பெரியோர்களும் ஓலையில் புஸ்தகமாகப் போட்டு அதில் வரிசையாய் எழுதி வந்தார்கள். இப்போது காகிதமாயிருந்தாலும் அதை நன்றாய் எழுதி வைத்திருக்கக் கூடாதா? விவாகத்திற்குப் பொருத்தம் பார்ப்பதில் இவ்வளவு அவசரமா? விவாகம் என்பது எப்படிப்பட்ட காரியம்? இதனால் தம்பதிகள் சுகப்பட்டிருக்கும் வழியைத் தேட ஆவலுள்ளவர்கள் ஏதோ சோதிடனை அவசரப்படுத்தித் தத்காலத்திற்குத் தக்கபடி எதையோ தெரிந்து கொண்டு விவாகத்தை எப்படியோ நடத்தி விடுகிறார்கள். பலனும் இதற்குத் தக்கபடியே எப்படியோ நடக்கிறது. ஆதலால் எவ்விஷயத்திலும் நிதானமாகத் தெரிந்துகொண்டு சரிவர நடத்த நம்மவருக்கும் பொருமையில்லை. நம்பிக்கையுமில்லை. ஆனால் அதைத் தெரிந்துகொள்ளாமலிருப்பதுமில்லை. எல்லாம் வெகு அச்ரத்தையுடன் செய்வது. அதனால் இக்காலத்திலோ

மரியாதை வெகு குறைவாயிருக்கின்றது. இதைப்பற்றி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் என்ற மகான் பின் வருமாறு கூறுகின்றார்— "ஒரு சோதிடன் சொன்னபடி ஒருவனுக்கு 100 ரூபாய் லாபம் வந்துவிட்டால் உடனே அவனுக்கு மரியாதையாய் ஒரு தாம்பூலம் கொடுக்கிறான். ரூபா 1000 லாபம் வந்தால் அவனை அழைத்து ஒரு வேளை சாப்பாடு போடுகிறான். சோதிடன் சொன்னபடி காரியம் பலிக்காமல் தவறிவிட்டால் அவனை எப்போதும் நிந்தித்துக் கொண்டே யிருக்கிறான்."

இவ்வாறு மரியாதை நடந்தேறிவருவதும் இக்காலத்தில் சுபாவமாயிருக்கின்றது. இப்படியானல் அவன்தான் எப்படி புகழ்பெறுவான். சாஸ்திரந்தான் எப்படி மேன்மையடையும். ஆதலால் நன்கு கற்ற மகான்களான ஜ்யோதிஷிகர்களை விசேஷமாய் சகலரும் பூஜிக்கவேண்டும் என்று ஏற்படுகின்றது.

ஆனல் இவ்விதம் சாஸ்திரங்களைத் தெரிந்துகொள்ளாமல் தைவஜ்ஞனென்று பெயர்மாத்திரம் வைத்துக்கொண்டு வருகிறவன் பாபியாவான். அவனுக்கு 'நக்ஷத்ரஸூசகன்' எனப் பெயர் மாத்திரம் ஏற்படும். அவன் சொல்படி ஆசாரங்களை அனுஷ்டிப்பவன் கேவலம் கெடுதியையே அடைவான். அதனல் நன்மையொன்றும் ஏற்படாது. இவ்விதம் சாஸ்திரங்களைக் கற்றறியாமல் ஏதோ சொல்லுகிறவன் கேவலம் ஜனங்களுக்கு 'மிருத்யு' ஆவான். ஆதிகாலத்திலேயே அந்த மகான் கூறி யிருக்கின்றார்.—சிலருக்கு வாரங்களை (கிழமைகளை) தெரியும். சிலருக்கு ஒன்பது கிரஹங்களை ஒப்பிக்கத் தெரியும். இன்னும் சிலருக்கு 27 நக்ஷத்திரங்களை தெரியும். இந்த மூன்றையும் நன்ருய் சொல்லத் தெரிந்தவர்கள் பிருகஸ்பதிகள் தான். இன்னும் பூமியில் சமுத்திரம் வரையில் தேடிப் பாருங்கள். சோதிடன் இல்லாத ஒட்டைச்சாண் பிரதேசமும் கிடைப்பது அரிது' என்ருர். ஆதலால் அக்காலத்திலேயே இம்மாதிரியானவர்கள் உலகில் நிறைந்திருந்தார்கள் என்று ஏற்படுகின்றது. ஆனல் இக்காலத்திலோ நன்ருய்க் கற்றுக் கொள்ள ஸாதனங்கள் ஏற்பட்டிருப்பதோடு இவ்வருமையான

சாஸ்திரத்தை நன்கு கற்கவேண்டும் என்ற ஆவலும் ஒவ்வொரு வருக்கும் ஏற்பட்டிருப்பதால் இப்போது எல்லோரும் நல்ல தைவஜ்ஞர்களாகவே யிருப்பார்கள் என்பதில் கொஞ்சமும் ஸந்தேகமில்லை. இவர்கள் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதோடு பிறருக்கும் வெகுவாய் சகாயம் செய்யலாம். அதனால் 'நாள் செய்வது நண்பன் செய்யான்' என்ற பழமொழியும் ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறே தேச காலங்களை சுத்தமாய் அறிந்த ஒரு தைவஜ்ஞன் செய்யும் நன்மைகளை ஆயிரம் யானைகளும் அதற்கு நான்கு பங்கு குதிரைகளும் செய்ய முடியாது. அப்படியே நமக்குத் தாயாரும் தகப்பனாரும் ஹிதமான நண்பனும் குருவுங்கூட ஓர் சோதிடன் செய்யும் நன்மைகளை உண்டாக்க மாட்டார்கள். ஆதலால் நன்கு கற்றறிந்த சோதிடன் உண்டாக்கும் நன்மைகள் அளவற்றவை. இவனைத் தரிசித்தாலே கெட்ட சொப்னங்கள், கெட்ட எண்ணங்கள், கெட்ட காரியங்கள் எல்லாம் உடனே நசித்துவிடும். ஆதலால் மேற்கூறிய நல்ல லக்ஷணங்கள் பொருந்திய ஜ்யோதிஷிகனை ஸகலரும் மிகுந்த பக்தி விச்வாஸத்தோடு பூஜித்து சகல நன்மைகளையும் அடைவார்களாக.

---

## நக்ஷத்ர ஜாதகம்

### கிருத்திகா நக்ஷத்ரம்

அ, இ, உ, எ எழுத்துகள். ரக்தவர்ணமுள்ளது. ஆறு நக்ஷத்ரங்கள். குரூரமானது. ஸ்திரீ ராக்ஷஸகணம். யோனி-ஆடு. இந்த நக்ஷத்ரத்தின் அதிதேவதை அக்னி. பிராம்மணஜாதி. மூன்று கால்கள். கீழ் நோக்கின முகமுள்ளது. சிவந்த நேத்திரம். இந்த நக்ஷத்திரம் சூன்யம். அக்னிமண்டலம். விருக்ஷம்-அத்திமரம். பக்ஷி-மயில். இந்த நக்ஷத்திரத்தில் அக்னி பயம். வீரபத்திரன் பிறந்தது இந்த நக்ஷத்ரத்தில் தான். முப்பது நாழிகைகளுக்கு மேல் நான்கு நாழிகை விஷம் (த்யாஜ்யம்). இதில் பிரயாணம் செய்யக்கூடாது. பதின்மூன்று நாழிகைகளுக்குமேல் தயிர் அன்னம்

புசித்து வடகிழக்கில் பிரயாணம் செய்தால் சுபம். ஜ்வரம் வந்தால் பிராண பயம். அல்லது ஒன்பது தினங்கள் கஷ்டம். இதற்குத் தக்கபடி சாந்தி செய்தால் எல்லாம் நிவர்த்தியாகும். கார்த்திகை மாதத்தில் கிருத்திகாநக்ஷத்ரம் சூன்யம். இதில் உத்பாதம் கண்டால் ஜ்வரம் பஞ்சம் முதலிய கஷ்டங்களேற்படும். கிருத்திகா நக்ஷத்திரத்தில் பெண் ருதுவானால் தரித்ர முள்ளவளாயும் துக்க முள்ளவளாயு மிருப்பாள். இதில் அக்னி ப்ரயோகம், சுரங்கம் வெட்டுதல், பிறர் பொருளை அபகரித்தல், கடன் தீர்த்தல், அஞ்சனம் போட்டுப்பார்த்தல், ஆபரணம் செய்தல், விஷ பிரயோகம் செய்தல், ஆயுதம் பிரயோகிப்பது, மித்ரபேதம் செய்தல், முதலிய கெட்ட காரியங்களை செய்யத் தகுந்தவைகள். சுப காரியங்களை விலக்கவேண்டும்.

கிருத்திகையில் பிறந்தவன் தேஜஸ்வியாயும் பிரஸித்தி பெற்றவனாயும் கம்பீரமானவனாயும் சரீரத்தில் எள்ளுபோன்ற மச்ச முள்ளவனாயு மிருப்பான்.

கிருத்திகா நக்ஷத்ரத்தின் முதல் பாகத்திற்கு அம்சாதிபதி குரு. தரித்திர அம்சம். கட்டுப்பட்டவன். 2-வது பாதத்திற்கு அம்சாதிபதி சனி. இது பாபமான அம்சம். பாபத் தொழிலைச் செய்வதற்கு இச்சை யுள்ளவன். வேசிகளின் வீட்டில் வசிப்பவன். 3-வது பாதத்திற்கும் சனிதான் அம்சாதிபதி. உக்ரமான அம்சம். மந்த புத்தியுள்ளவன். துஷ்ட சேர்க்கை யுள்ளவன். 4-வது பாதத்திற்கு அம்சாதிபதி குரு. சிரேஷ்டமான அம்சம். ஆகை யால் வித்தை நிறைந்தவனாயும் விநயம் முதலிய நற்குணங்களோடு கூடினவனாயும் தார்மிகனாயு மிருப்பான்.

கிருத்திகா நக்ஷத்ரத்தில் பிறந்தவனுக்குச் சூரியமகா தசை 6-வருஷங்கள். ஸ்வபுக்தி 3-மாதம் 18 நாட்கள். இதில் பிறந்த வனுக்கு மூன்றாவது பாதத்தில் ஜ்வர பயம். ஒருவருஷ முடிவில் ஜன்னி முதலிய கஷ்டங்களேற்படும். அல்லது இரண்டாவது வயதில் ஸர்ப்ப பயம். ஐந்தாவது வயதில் ஜ்வர பயம். ஏழாவது

வயதில் ஆயுத பயம். பத்தாவது வயதில் அக்னி பயம். அவனுக்கு 21-வது வயதில் அகால மரணம். தேவதைகளினுடைய அனுக்ர ஹத்தினால் இது தப்பினால் 80 வருஷம் பரம ஆயுள். சுபம். இவை இதன் பலன்கள்.

---

## ஜாதகமஞ்ஜரீ

### 2-ம் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| குரு | | | |
| கேது | | | ல / செவ். |
| | | | சந். ராகு |
| | சூர். சனி | புத. | சுக். |

மார்க்கசிர்ஷமாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் தசமி திங்கட் கிழமை பூர்வ பல்குனீ நக்ஷத்திரம் (பூரம்) வலித்த யோகத்தில் கடக லக்னத்தில் பிறந்தவனுக்குப் பலன். பஞ்சாங்கபலன். மார்க்க சீர்ஷமாதத்தில் பிறந்தவன் பலன் 1-ம் ஜாதகத்தில் கூறப்பட்டது. கிருஷ்ணபக்ஷத்தில் பிறந்தவன் பராக்ரம முள்ளவனும் நல் லொழுக்கம் உள்ளவனும் பலமில்லாதவனும் கலகப் பிரியனும் அழகுள்ளவனும் சஞ்சல முள்ளவனு மிருப்பான். தசமி யில் பிறந்தவன் மனதில் உதாரமாயும் நல்லொழுக்க முள்ள வனும் தேவதைகளை அர்ச்சிப்பதில் ஆசை யுள்ளவனும் தர்ம மான கார்யங்கள் செய்பவனு மிருப்பான். திங்களில் பிறந்தவன் பலன் 1-ம் ஜாதகத்தில் கூறப்பட்டது. பூர நக்ஷத்திரத்தில் பிறந்த

வன் பெரும்புகழ் அடைந்தவனும் நல்ல புத்தி யுள்ளவனும் நல்ல நடத்தை யுள்ளவனும் தயாளுவாயும் ராஜ அதிகாரம் உடையவனும் இருப்பான். ஸித்தயோகத்தில் பிறந்தவன் உதார மன முள்ளவனும் நல்ல நடத்தையுடன் சேர்ந்தவனும் ஒவ்வொரு நாளும் பாக்யம் பெருகுகிறவனும் சாஸ்திரங்களின் ஸாரத்தை யறிகிறவனும் இருப்பான். கடகலக்னத்தில் பிறந்தவன் வணக்க முள்ளவனும் சலிக்கிற புத்தி யுள்ளவனும் எப்போதும் ஜலக்ரீடையில் ஆசை யுள்ளவனும் நல்ல ஆகாரம் சாப்பிடுகிறவனும் இருப்பான்.

## சூர்யாதி க்ரஹங்களின் பலன்

சூர்யன் 5-வது வீட்டிலிருந்தால் சண்டை யுள்ளவன். சுகமில்லாதவன். தாய் தந்தையருக்கு சுகம் கொஞ்சம். பணத்திற்கு எப்போதும் கவலை. சந்திரன் தன ஸ்தானத்தில் இருந்தால் ஸ்திரீகளுக்கு சுக முண்டாக்குவான். ஸகல ஐச்வர்யமும் இருக்கும் குடும்பி. அல்ப பிரியமுள்ளவன். செவ்வாய் லக்னத்தில் இருந்தால் மிகவும் கோபமுள்ளவன் நேத்திர பீடையுடையவன்

அந்த தசாபுக்தியில் இரும்புத் தடியாலும் நெருப்பாலும் விரண வியாதியாலும் பயமுண்டாகும். புதன் சுக ஸ்தானத்தில் (4-ம் வீட்டில்) இருந்தால் சகல சுகமு முண்டாகும். தோட்டம் நல்ல வாகனம் முதலியவை உண்டாகும். குரு 9-ல் இருந்தால் தனது தர்மத்தைக் காப்பாற்றுவான். கெட்டிக்காரன். நல்ல குண முள்ளவன். ஆனால் சற்று சோம்பல் உள்ளவன். சுக்கிரன் 3-ல் இருந்தால் ஸ்திரீகளுக்கு மிகவும் பிரியமுள்ளவன். பூர்ணசுக மேற்படும். வேலைக்காரர், பிள்ளைகள் இருப்பார்கள். சண்டையில் பயந்தவன். சனி 5-ல் இருந்தால் சந்தான கஷ்டம் ஏற்படும். மந்தபுத்தி யுள்ளவன். நல்ல நடத்தையுள்ளவன். சாஸ்திர வாக்யங்களை நம்பமாட்டான். ராகு குடும்பத்தில் (2-ம் வீட்டில்) இருந்தால் குடும்பத்திற்கு எப்போதும் பீடை. பயமற்றவன். பொய் பேசுகிறவன். ஜெயிலில் வசிப்பவன். கேது 8-ல் இருந்தால் மூல

வ்யாதி ஏற்படும் அந்த ஸ்தானம் கன்யா, விருச்சிகம், விருஷபம் மிதுனமானல் எப்போதும் லாபம் ஏற்படும்.

## பாவ பலன்

கடகராசி லக்னமானல் மனிதன் பித்தம் அதிகமாயுள்ளவன். சுத்தன். தர்மசீலன். நல்ல வேஷமுள்ளவன். பொருமை யுள்ளவன். ஜலத்தில் ஆசையுள்ளவன். ஸிம்மம் 2-வது ஆனல் பராக்ரமத்தால் தனம் ஏற்படும். ஸகலருக்கும் உபகாரம் செய்வான். அடக்க முள்ளவன். பராக்ரமமுள்ளவன். கன்யா 3-ம் இடமானல் நல்ல நடத்தையுள்ளவன். பத்னீ புத்திர மித்திரர்கள் சுகமடைவார்கள். பிராம்மணர்களைப் பூசிப்பான். துலா 4-வது ஆனல் வித்தை யுள்ளவன். அடக்கமுள்ளவன். சாந்தன் எப்போதும் பிரசன்ன முகமுள்ளவன். விருச்சிகம் 5-வது ஆனல் பிள்ளையை பெறுவான். அவன் குணம், ரூபமுள்ளவன். தனுசு 6-வதானல் சர்ப்பம், புலி காடி, முதலிய மிருகங்களால் பீடை ஏற்படும். மகரம் 7-வது ஆனல் பத்னீ ஜம்பமுள்ளவன். வெட்கமில்லாதவன். கடுமையான வன். கும்பம் 8-வதானல் நீண்ட வியாதி உண்டாகும். விரணம், வாதம் இவற்ருல் மரணம் ஏற்படும். மீனம் 9-வ தானல் தர்ம காரியங்களை மிகவும் கஷ்டப்பட்டு செய்வான். ஆனல் தீர்த்தயாத்திரையிலும் மகான்களை சேவிப்பதில் மட்டும் மிகுந்த ஆவலுள்ளவன். மேஷம் 10-வதானல் எப்போதும் கெட்ட காரியங்களைச் செய்வான். கோழ்ச் சொல்லுகிறவனென்று உலகில் நல்லவர்கள் நிந்திப்பார்கள். ரிஷபம் 11-ம் இடமானல் நாற்கால் பிராணிகளால் லாபம் உண்டாகும். அப்படியே பசு, எருமை, குதிரை முதலியவை இவனுக்கு லாபத்தைக் கொடுக்கும். மிதுனம் 12-ம் இடமானல் லாபத்திற்குத் தக்க வ்யயம் ஏற்படும். பெண் கல்யாணத்தாலும் சாதுக்களைப் பூசிப்பதாலும் சிலவு உண்டாகும்.

## பாவாதிபதி பலன்

லக்னதிபதி தனஸ்தானத்தில் (2-ல்) இருந்தால் தனமுள்ள வன். பருத்த தேகமுள்ளவன். எப்போதும் நல்ல காரியம்

செய்வான். குடும்பத்தில் முக்யனு யிருப்பான். தனுதிபதி 5-ல் இருந்தால் தகப்பனுருக்கு எப்போதும் லாபமுண்டாகும். நீண்ட ஆயுள். மிகவும் குரூரன். தேசாந்தரத்தில் மரணம். 3-ம் அதிபதி 4-ல் இருந்தால் அவன் சுபனுனல் தகப்பனுருக்கு தனம் உண்டாகும். அவன் அசுபனுனல் தகப்பனுருக்குப் பணம் எல்லாம் போய் தரித்திரனுவான். 4-ம் அதிபதி 3 லிருந்தால் பந்துக்கள் ரக்ஷிக்கப் படுவார்கள். ராஜனுல் புகழ் ஏற்படும். 5-ம் அதிபதி லக்னத்தி லிருந்தால் சாஸ்திரங்கள் அறிந்தவன். நல்ல கர்மம் செய்பவன். இவ்வுலகில் நல்ல புத்திசாலியாயும் சாந்தனுயும் மதுரமாய்ப் பேசுகிறவனுயும் இருப்பான். 6-ம் அதிபதி குரூரனுய் 9-ல் இருந்தால் குரூரன். பந்துக்களுக்கு விரோதி. சுபனுனல் பந்துக்களைக் காப்பாற்றுவான். 7-ம் அதிபதி குரூரனுகி 5-ல் இருந்தால் பிள்ளைகள் விரோதிகளாவார்கள். சுபனுனல் பிள்ளைகள் கீழ்ப் படிந்து நடப்பார்கள். 8-ம் அதிபதி சுபனுகி 5-ல் இருந்தால் புத்திரர் சகாயமாய் இருப்பார்கள். குரூரனுனல் பிள்ளைகள் நாசமாவார்கள். அல்லது ரோகம் அடைவார்கள். 9-ம் அதிபதி தர்மத்தில் (9-ல்) இருந்தால் தர்ம சுபாவமுள்ளவன். விசால நேத்திரமுள்ளவன். பந்துக்களுக்கு மிக பிரீதி யுண்டாக்குவான். கொடையாளி. தேவதைகளைப் பூஜிப்பவன். 10-ம் அதிபதி லக்னத்தி லிருந்தால் மாதா பிதாக்களை சேவிப்பவன். அவ் வதிபதி குரூரமானுல் மாதா பிதாக்களுக்கு த்வேஷி. லாபாதி பதி 3-ல் இருந்தால் பராக்ரமத்தால் தனம் வரும். சகோதரர் களால் சுகமுண்டாகும். இவன் பராக்ரம முள்ளவன். 12-ம் அதிபதி 4-ல் இருந்தால் சுகம் சொல்பம். பயம் அதிகம். அரசாங்க உத்தியோகம் ஏற்படும். அதனுல் சுகமுண்டாகும்.

## ஜீவித கால பலன்கள்

முதல் வருஷத்திலும் 5-ம் வருத்திலும் அங்கங்களுக்குப் பீடை ஏற்படும். அப்போது வாதம், பித்தம் அதிகமாகி தேகம் துர்ப்பலமாகும். நிச்சயம். 2-வது 6-வது வயதில் தகப்பனுருக்கு லாபமுண்டு. திடீரென்று தனம் ஏராளமாய் வந்து இஷ்டங்கள்

சித்திக்கும். 3-வது 8-வது வயதில் தகப்பனுருக்கு லாபமுண்டாகும். பிறகு திருடனால் தன ஹானி ஏற்படும். ஆனால் தகப்பனுருக்குப் பயமில்லை. 4-வயதில் மாதாவுக்குக் கஷ்டம். பிறகு அந்த வயது கடைசியில் கஷ்டம் நிவர்த்தியாகும். 7-வது 9-வது வயதில் வித்யாரம்பம் ஏற்படும். முதலில் பாஷையும் பிறகு ராஜ வித்தையும் படிப்பான். 11,12 வயதுகளில் நிலத்திற்காகப் பணச் செலவு உண்டாகும். பிறகு கச்சேரிக்குச் சென்று அதுவும் வீணாகும். 10 அல்லது 13-ம் வயதில் கல்யாணம் கூடும். அதற்காகத் தகப்பனார் தேசாந்தரங்களில் அலைந்து திரிவார். வீட்டிற்கு வந்ததும் விவாகம் ஏற்படும். 14, 15-வயதுகளில் தானே அரசாங்கத்திற்குச் சென்று அங்கு கஜானாவில் இருந்து அநேகர் இவனைப் பின் பற்றுவார்கள். 16, 18-வயதுகளில் தேசாந்திரத்தில் போக நேரிடும். அங்கும் அரசாங்கத்திலிருந்து கொஞ்சம் லாபம் ஏற்படும் 19, 20-வயதுகளில் மாதாவிற்கும் பிதாவிற்கும் மரணம் உண்டாகும். வீட்டில் அதி துக்கம் உண்டாகும். பிறகு பத்னிக்கும் மரணம் ஏற்படும். 21, 22-வயதுகளில் இதனால் அதிக துக்கம். அங்கு மிங்கும் அலையவேண்டும். எங்கும் காரியம் சித்திக்காது. 23, 24-வயதிலும் அப்படியே யிருக்கும். அதற்குத் தகுந்த மந்திரம் ஜபிக்கவேண்டும். 25-ல் கல்யாணம் நடக்கும். சந்தேகமில்லை. 26 அல்லது 27-ல் பிள்ளை பிறப்பான். சகல காரியங்களும் சித்திக்கும். 28-ல் தேசாந்திரம் போகவேண்டியிருக்கும். அங்கு அரசாங்கத்தில் இருந்து அதனால் தனமுண்டாகும். 30 அல்லது 31-ல் கபம், வாதம் இவைகளால் பீடை. தேகம் துர்ப்பலமாகும். பத்னி துக்கம் ஏற்படும். 35-வது வயதில் அரசாங்கத்தில் நல்ல புகழ். அரசாங்கத்திலிருந்து மாதம் மாதம் பணம் வரும். 38 முதல் எட்டு வருஷம் ஸகல சுகங்களும் உண்டாகும். பிறகு எட்டு வருஷம் இவ்வாறே. அதன் கடசியில் வாயு பீடை ஏற்படும். பிறகு உஷ்ண வியாதியால் இதுவும் தணிந்து சர்வ சுகமும் உண்டாகும். பிறகு 67-வது வயதில் தனது தேசத்தில் மரணமடைந்து குலாசாரப்படி நதீதீரத்தில் தகனாதி க்ரியைகள் நடக்கும். இவை இந்த ஜாதகனுக்குப் பலன்கள்.

# ஜ்யோதிஷ பாடம்

இக்காலத்தில் அநேகர் ஜ்யோதிஷத்தைப் படித்திருக்கிறார்கள். இன்னும் வெகு ஜனங்கள் படிக்க ஆவல் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த சாஸ்திரத்திலுள்ள சாமான்ய விதி விசேஷ விதி முதலியவைகளால் வெகுவாய் பாதிக்கப்பட்டு கற்க அநுகூல மற்றவர்களாய் அநேகர் வருந்துகின்றனர். இவ்வித கஷ்டங்களைப் போக்கடித்து வெகு சுலபமாய் ஜோதிடத்தைக் கற்க இப்பத்திரிகை உதவி புரியுமா வென்று அநேகர் நம்மை நேரிலும் கடித மூலமாயும் கேட்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களது இஷ்டத்தையும் அவர்கள் போன்ற நண்பர்களது இஷ்டத்தையும் பூர்த்தி செய்ய வெகு லகுவாய் சோதிடத்தைக் கற்பிக்க இந்த பாடங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. இவைகளை நன்கு உணர்ந்துகொண்டால் மேல் மிகவும் பெருத்த விஷயங்களை அவர்களே தெரிந்துகொள்ள மிகவும் சுகமா யிருக்கும்.

தவிர இக்காலத்தில் நமது ஸ்திரீகளுக்கும் நம்மைப் போன்ற உரிமையளிக்க வேண்டுமென்பது பல மேதாவிகளின் மேலான கொள்கையாய் இருக்கின்றது. அப்படியே கல்வித் துறையிலும் இன்னும் பல துறைகளிலும் நமது ஸ்திரீகள் மேன்மையடைந்து வருவதை நாம் பிரத்யக்ஷமாய்க் காண்கிறோமல்லவா? அவ்வாறே அவர்களும் இந்த மேன்மையான ஜ்யோதிஷ சாஸ்திரத்தை ஏன் கற்கக்கூடாது. கற்றுக்கொண்டிருந்தால் நமக்குத் துணையாக அப்போதைக் கப்போது சரிவர வீட்டுக் காரியங்களை நடத்துவதோடு இன்னும் ஜீவித காலத்தில் நடக்கும் பல விஷயங்களையும் தெரிந்துகொண்டு அதற்குத் தக்கவாறு பரிஹாரங்களை நம்மோடு அநுஷ்டித்து மேலான சுகம் பெறலா மல்லவா? இதற்கு அடிப்படையாக ஆதிகாலங்களில் வயது சென்ற பெரியோர்களிருந்தால் அவர்கள் குழந்தைகளுக்கு 'பிரவாச்சுவடி' சொல்லிக் கொடுப்பது

வழக்கமா யிருந்தது. அதனால் ஆண் பெண் குழந்தைகள், வருஷம், மாதம், திதி, வார, நக்ஷத்திரம், யோகம், கரணம் முதலியவைகளை நன்று கற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்க்குக் கணக்கும் மனப் பாடமாய் பெரியோர்களால் கற்றுக் கொடுக்கப்படும். இப்படியே அதை விருத்தி செய்திருந்தால் கிரமமாய் ஜ்யோதிஷமே கற்க இடமாயிருக்கும். பிறகு வெகு அசௌகரியங்களால் அவை தடை பட்டுப் போனதால் இவ்வளவு மாத்திரம் நமது ஸ்திரீகள் அறிந்து கொண்டு இதைக்கொண்டு ஒருவாறு நல்ல ஆசாரத்தோடு குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இப்போது அந்த வழக்கமே யில்லாததால் அநேகம் புருஷர்களுக்கே இந்த திதி வார நக்ஷத் திரங்கள் ஒழுங்காய்த் தெரிந்துகொள்ள இடமில்லாம லிருக்கிறது. ஆனால் கிராமங்களில் கொஞ்சம் இவைகளின் ஸ்வரூபம் தென் படலாம். ஆனால் பட்டணங்களிலோ இங்கிலீஷ் முறைப்படி கணிதம் முதலியவைகளைக் கற்றறிந்த மேதாபிகளான ஸ்திரீ புருஷர்கள் அளவற்றவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் ஹோரா பாகமான பல ஸ்கந்தத்தையும் விசேஷமாய் அப்யசித்திருந்தால் நமது தேசத்திற்கு அளவற்ற நன்மை யேற்படும். ஆதலால் நமது ஸ்திரீகளுங் கூட இந்த ஜ்யோதிஷத்தைப் பிரியமாய்ப் படித்து நல்ல பயனடைய வேண்டுமென்றே இந்த பாடங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. இவைகள் நமது ஸ்திரீ புருஷர் இருவர்களுக் கும் மிகவும் அவசியமானவை.

(தொடரும்)

# SEX AND CHARACTER STUDY FROM THE SEVENTH BHAVA

BY

MR. T. V. SIVASUBRAMANIAN, B. A., (Hons.)

***The Seventh Bhava*** deals with one's *Kalathram* or partner in life, and the happiness or pleasure one has in store from or through his partner in life. We Hindus often look upon the coming of the newly-wed wife as a very auspicious function and if anything wrong happens the new wife's name will be on every one's lips. Some authorities call the seventh Bhava as the Sampath Bhava. The term Sampath means wealth and any husband who has got a devoted wife can really consider himself rich. Well has it been said that the wife has got a multifarious role to perform in the house; she is not merely the loving wife and the endearing mother but also the comforter and sharer of their husband's pleasures and sorrows. She is also the consulter and minister to her husband in matters concerning the household. A **स्त्रीरत्न** is really a jewel that illuminates the entire household.

2. Thus the seventh Bhava has to determine to a large extent the destiny of a person. This Bhava, it might be noticed, has been purposely placed between the sixth and the eighth bhavas which are respectively the houses of disease and death. The seventh house is itself called the **अस्तमन** house and is often also referred to as the ***Marakasthana***, or the seat of death. The owner of this

seventh house has got death-inflicting powers himself either in his दश or in his अन्तर्दशाs. A man who wants to lead a domestic life with his partner must be very careful like a wire—walker, for his path lies between the Scylla of the house of disease and the Charybdis of the House of death. His own life's stability rests on the stability of the seventh house and if he does not conduct himself properly he either runs the risk of disease or the risk of death.

3. It is very easy for an expert in Astrology to give all the details regarding his partner in life from the tiniest description of the personality to the intricate detail of character and parentage. By means of some calculation it is even possible to place an exact copy of the horoscope of the partner. Whenever proposals are made for a marriage to be performed, the first thing that any lay. man does is to take both the horoscopes of the intended young people to an astrologer for consultation with regard to the agreement or otherwise of the *Poruthams.* A family astrologer very often knows how to answer, having in view the ideas and notions of the consultee which he only knows too well due to constant intimacy or through some other local news vendor, in the shape of a servant-maid, etc. These poruthams have been skilfully arranged with a view to enable both parties to think well and deeply whether the match would prove to be of mutual advantage and whether the young persons to be mated are best fitted mutually to one another to lead a life of success. Some local astrologers pay more importance to the poruthams than to any

other special feature in the horoscopes. Other features should also be weighed twice before a judgment can be pronounced on the agreement of the poruthams alone. It should also be seen that the Dasas and the Antar-dasas of the couple should also follow in such a cycle that any evil that can be predicted in a horoscope may be annulled or cancelled or modified by the check or balance afforded by the virtues of the other horoscope. The essence of marriage lies in the check and balance provided by the couple mutually to each other.

4. It is not here proposed to deal with the various details regarding either the Kalatra Bhava or the Kalatra Dosha. There can be few horoscopes without Kalatra Dosha on any side; for it is very improbable that a couple could both die at the same time neither preceding the other. In the generality of cases either the one or the other survives. Very often both have very strong Kalatra Dosha and in such cases the partners sometimes continue right up to the very end of their lives.

5. It is proposed here to show that from planetary combinations etc. it is possible to give readings regarding morality in sex etc. Sukra who is the planet controlling marital relations in general when found in conjunction with the lord of the seventh house will give a loving and dutiful wife. When Sukra alone occupies the seventh house it is often stated that the native will be given to a sensual mode of living and that he will be very passionate in love. When there are no evil aspects it can be safely predicted that the person will have only one wife. But there will be a second wife in cases of evil combinations

in the 2nd or 7th houses or if Sukra is debilitated or is in the 11th house or if the lord of the 7th house is in a bad house.

6. The following combinations show looseness or perversity in morals.

Sukra when found in Lagna with the lords of the second or sixth or seventh houses and also in any kind of *sambandham* with evil planets naturally indicates a highly sensual character and in very many cases a sensual rake.

If an evil planet is found in the seventh house in conjunction with the lords of the first or second or sixth houses it indicates a person who is always fond of other people's wives in preference to his own wife, however beautiful or accomplished she may be. Such people are always grumblers and quite unsatisfied sexually.

Where the lords of the sixth and the seventh houses are malefics and found in debilitation the native will be a regular whoremonger.

When the lord of the tenth house is in his own house and in conjuction with the lords of the second and the seventh houses it indicates an adulterous disposition. This will be quite apparent where in a horoscope with Libra (Thula) as the birth sign Moon is in Cancer with Mars.

If Sukra and Sun are found together in the seventh house the wife will be barren.

The wife will be masculine if the Moon is found in an odd Rasi as Aries, Gemini, Leo, etc., and she will

be feminine when the Moon is fonnd in an even Rasi as Taurus, Cancer, etc.

If the Navamsa of both the Lagna and the Seventh House falls in the House of Mars the wife of the native will be a regular whore. But this must be used with caution and care. Again if the Lord of the Navamsa of the Lagna or the Seventh house is in conjunction with a Neecha or अस्तङ्गत planet, the wife will be adulterous but she will be found to be a very early widow. This prediction must also be based on prudence.

When the lord of the seventh house is with Sukra together with evil planets or in an evil house the native will lead an immoral life.

If there are many planets in the second or eleventh houses or if Sukra is found in conjuction with Kethu or some other evil planet the native has usually two or three wives.

If Budha as the lord of the seventh house occupies an evil house and is in conjunction with the owner of the sixth house and is found placed between two evil planets either in the same Rasi or in different Rasis, the wife of the native may even be tempted to murder her husband and also cause destruction to the family. As between horoscopes with Sagittarius and Pisces as Lagna, this can apply only to the former where Budha may be in conjunction with Sukra. Even here this being a rare occurrence prediction must be cautiously made.

The number of wives will be determined by the number of powerless planets who are in conjunction with

the lord of the seventh or the lords of the second unaspected by benefics. This is also a general observation only.

Looseness of morals may be found in many horoscopes but it need not necessarily follow that all of them should be immoral. Many may have only ideas but may not seek to be bold enough to carry out their ideas. To many others the opportunity might not have occurred. To others, the feeling may be only temporary when they behold a beauty of God's creation. In the mildest form it may take the course of an admiration at a distance without the desire of possession. Hence all these observations must be used having strict regard to the character study of the native and other factors.

---

## ACKNOWLEDGMENT—PERIODICALS

We acknowledge receipt of the first issue of Vol. IV of "Tiruvarangam Peria Koil" edited by Sahitya Siromani, Sthaneekam Parthasarathi Ayyangar from Sri Rangam. The issue gives a detailed list of festivals in Sri Rangam for the Tamil year, Bhava.

* * * *

We have received a copy of "The Astrological Magazine" edited by Prof. B. Suryanarayana Rao from Bangalore. The journal is as usual resplendant with highly instructive and interesting contributions on varied topics of Astrology.

* * * *

The latest issues of the "Indian Mirror", "Hindu Nesan" and "Arya Dharmam" have also been received. Our thanks are due to the Editors of all the periodicals.